
# ★ தமிழ் முரசு

முரசு - 5

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

ஒலி : 8



இருட்டுக்குள்,
எனது தலையணை
நனைந்துபோன விஷயம்
யாருக்குத் தெரியும்?

எங்கள் நிலத்தை
இராணுவச் சப்பாத்துக்கள்
உழக்க,
எங்கள் அம்மாக்கள்
பதுங்கு குழிகளுக்குள்
விழிகளைப் பிதுக்க
இங்கே,
அகதி நிலத்தில்
நானோ சிறைக்குள்.

எனது விழிகள்
தலையணையை நனைத்தாலும்,
விடிவிற்காக அவை
தவமியற்றுகின்றன.

— ஒரு அகதிக் கவிஞன் —

ஆனி - 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்




தமிழ் முரசு - 68 வது

## முடிவுகளை நாமே எடுப்போம்!

தென் ஆபிரிக்காவில், சிலியில், எல்சல்வடோர்ரில், சீனாவில், துருக்கியில் மனித உரிமை மீறல்கள் எவ்வளவு சுதந்திரமாகத் தமது பாதங்களைப் பதித்துக் கொண்டிருக்கின்றனவோ, அதைப்போல இலங்கையிலும் மீறல்கள் தமது எல்லைகளைக் கடந்து கொண்டிருக்கின்றன. மனித உரிமைகளை மீறும் ஏகாதிபத்தியச் சக்திகளின் வெறியாட்டத்தின் முன் சர்வதேசச் சட்டங்கள், சர்வதேச ஒழுங்குகள் அனைத்துமே வெறும் தூசுதான். இந்த மனித விரோதச் சக்திகள் இன்று இஸ்ரேலிய கோழைத்தனமான மனித அழிப்புத் தந்திரங்களைத் தமது மூல போதனையாக்கிக் கொண்டுள்ளன. இந்தப் போதனைகளுக்கு எதிராக ஒரு போரினை நடத்தவேண்டிய தார்மீக- கடுமையான பொறுப்பு அடக்கப்படும் அனைத்து வர்க்கங்களையும் சார்ந்த ஒன்றாகும். ஈழ மக்களுக்கும் இந்தப் போரில் நிறையப் பங்கு உண்டு என்பதைத் தமிழ் முரசு தனது கடந்த காலங்களில் சுட்டிக் காட்டியிருக்கின்றது, இன்று மீண்டும் ஒருதடவை சுட்டிக்காட்டுகின்றது.

இந்திய ஆக்கிரமிப்பு அண்மையில் இலங்கையில் இடம்பெற்றபோது மக்கள் தமது வாழும் உரிமைக்கு இந்தியா உண்மையிலேயே உதவுகின்றது என்றுதான் கருதிக் கொண்டார்கள். இந்த ஆக்கிரமிப்புப் பற்றி லண்டன் 'கார்டியன்' பத்திரிகை தலைப்புத் தீட்டும்போது —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆக்கிரமிப்பா? பாசாங்கா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டது. இது ஒரு நியாயமான கேள்வி. இந்தக் கேள்விக்கு மத்தியில் இருக்கும் சரியான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை ஈழமக்கள் அனைவருக்கும் உண்டு.

இந்திய ஆக்கிரமிப்பின் பின்னர்தான் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன. இந்தியாவின் ராஜதந்திரம் இலங்கையின் ராஜதந்திரத்திற்குள் மழுங்கிப்போகும் ஒவ்வொரு தடவையும் ஈழமக்களின் பக்கம் உயிரிழப்புக்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்தத் தடவை, இந்திய ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் தமிழ்பேசும் பகுதிகளில் தனது ஆக்கிரமிப்பின் பலத்தை அதிகரித்து இருக்கின்றது.

ஈழப்போராட்டத்திற்கு இந்தியா உதவிக் கொண்டிருந்தாலும், போராட்டத்தில் தியாகிக்கப்படும் இரத்தம் ஈழமக்களதும், ஈழப்போராளிகளினதும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நாங்களே எமது போரை முன்னெடுக்க வேண்டும். எங்கள் உரிமைகளைக் காக்கும் விஷயத்தில், முடிவுகளை எடுக்கும் பொறுப்பும் எங்களுடையதாகவே இருக்க வேண்டும்.

இன்று எமது போராட்டத்தில் ஏற்பட்டிருக்கும் ஸ்தம்பித நிலை பலருக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனல் ஸ்தம்பித நிலை இறுதி அத்தியாயமல்ல என்ற தெளிவு எங்கள் அனைவருக்கும் ஏற்பட வேண்டும். இந்த நிலையை மாற்றும் பொறுப்பு மக்களின் கரத்திலேயே உள்ளது. ஈழவிடுதலைப் போராட்டம் ஒரு மனித விடுதலைப் போராட்டம், மக்கள் எழுச்சிப் போராட்டம் என்ற தெளிவுடன் எங்களது நடையைப் பலப்படுத்த உறுதி பூணுவோம். அனைத்துக்கும் மேலாக, எங்களது முடிவுகளை நாமே எடுப்போம் என்று சபதம் செய்து கொள்ளுவோம். ஏனெனில் எங்களுக்கு இரவல் முடிவுகள் இனிமேல் தேவையில்லை. நாம் சுதந்திரமாக இயங்குவோம், எங்களது முடிவுகளை நாமே எடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் காட்டும் யதார்த்தம்

ஈழத்திலிருந்து இந்தியாவிற்கு அடைக்கலம் தேடிச் செல்லும் ஈழ மக்கள், ஈழத்தில் இன்றைய யதார்த்தத்தை அம்பலப்படுத்துகின்றனர்கள். "இந்து" பத்திரிகையை அடிப்படையாக வைத்துக் கீழ் வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

ஈழக்கிராமங்களிற்குள் வெளிநாட்டவர்கள் "வெள்ளைத்தோல்" களைக் கொண்டவர்கள் இலங்கை இராணுவத்தினால் அழைத்துவரப்பட்டதாகச் சொல்கிறார் திரு.அழகசுந்திரம்.

"கட்டைத்தாடியும், வெள்ளைத் தோலும் கொண்ட வெளிநாட்டவர்கள் யாழ்ப்பாணக் கிராமங்களிற்கு சிறீலங்கா இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்டனர். இவர்கள் அங்கே எமது மக்களைச் சித்திரவதை செய்தார்கள். இந்த வெளிநாட்டவர்கள் எந்த நாட்டினைச் சேர்ந்தவர்கள் என்பதை என்னால் சொல்லமுடியாமல் இருக்கின்றது. எனது கிராமமான நல்லூரிற்கு வந்த இவர்கள் அங்கேயுள்ள இளம் பெண்களையும், கர்ப்பிணிப் பெண்களையும் வாள்களைக்காட்டி மிரட்டிப் பிடித்துக் கொண்டுசென்றார்கள். அங்கு நேரடியாக அட்டூழியங்களும் செய்தார்கள்.

"சிறீலங்கா இராணுவத்தினர், யாழ்ப்பாணத்திற்கு தேசிய பாது காப்பு அமைச்சரான அத்துலத்முதலி வந்த போது, மக்கள் அமைதியாக வாழ்கின்றார்கள் என்ற பிழையான மாயையைக்காட்டும் விதத்தில் நடந்து கொண்டார்கள். நாங்கள் மக்களுடன்சமாதானமாக இருப்பதைப் போன்று வீடியோக் கசெட்டுக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தார்கள்!! இது மண்டபம் அகதி முகாமிற்கு வந்து சேர்ந்த அழகுசுந்தரம் காட்டும் யதார்த்தம்.

ஜே.ஆர் ஜெயவர்த்தனவும், லலித் அத்துலத் முதலியும் ஈழமக்களைப் போராளிகளிடமிருந்து விடுதலைப் படுத்துகின்றார்கள் என்ற கருத்தை ஒரு அகதிகள் குழு முழுமையாக மறுத்தது.

30 வயதுடைய யூகவதியின் கணவன் மேற்கு ஜேர்மனியிலுள்ள அகதிகள் முகாம் ஒன்றில் இருக்கின்றார். இந்தப் பெண்மணி பின்வருமாறு சொல்கின்றார்.

"கெலிகெப்டர்களில் இருந்து துண்டுப் பிரசுரங்களை வீசிய இலங்கைப் பாதுகாப்புப் படை, அனைத்து மக்களையும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குள் சென்று தஞ்சமடையுமாறு கேட்டுக் கொண்டது. நாங்கள் தஞ்சமடைய உள்ளே சென்ற போது கோவிலின் மீது குண்டு போடப்பட்டு அரைவாசிப்பகுதி சேதமடைந்ததுடன், அநேகமான மக்கள் கொல்லப்பட்டனர். அதற்குள் இருந்து தப்பியவர்களில் நானும் ஒருத்தி. நான் திருமணம் புரிந்து 6 மாதத்துக்கிடையில் எனது கணவன் மேற்கு ஜேர்மனிக்குச் சென்றார். எனது 18 வயதுடைய குழந்தையை அவர் இன்னமும் காணவேயில்லை."

இந்தியா விமானப்படையினால் இறக்கப்பட்ட உணவுப் பொருட்கள் போதியதாக இருக்கவில்லை. எனினும் அநேகமானோரை அதுபட்டினியில் இருந்து காப்பாற்ற உதவியது என்று சொல்கின்றான் ஈழ மாணவனான சங்கர்.

ஜேசுநாதனும், அவரது மனைவி அனித்தாவும் சிறீலங்கா இராணுவத்தின் சித்திரவதையொன்றைப் பின்வருமாறு விளக்குகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்களது சித்திரவதைகளில் ஒன்று சோடப் போத்தல்களை உடைத்து வீதியில் போட்டுவிட்டு அதன் மீது எங்களை உருளச் சொல்லுவதாகும். நாங்கள் அதைச் செய்ய மறுத்தால், தண்டனையின்னமும் மோசமாக இருக்கும்".

அகதிகள் காட்டும் யதார்த்தங்கள் இவையாகும்.

பிரான்சு:

# போராட்டத்தை தொடர்ந்து நடத்த அவோபுவாத் தொழிலாளர்கள் உறுதி!

அவோபுவத் நிறுவனம் தனது கடைசி அத்தியாயத்தினை எழுதிவிட்டது. கடந்த இரண்டு வருடங்களாக பிரான்ஸில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு மிகவும் பரிச்சயமாக இருந்த இந்தப் போராட்டவரலாறு ஒரு தற்காலிக முடிவினைக் கண்டுள்ளது. பிரெஞ்சு முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு எதிராக அவோபுவத் நிறுவனத்தில் தொழில்புரிந்த இலங்கைத் தமிழ் அகதிகளினால் தொடக்கப்பட்ட ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட போராட்டம், ஒரு முழுமையான போராட்டம். இன்றைய தினம் இந்தக் கம்பனியில் தொழில் புரிந்த தொழிலாளர்கள் அனைவரும் வேலை இழந்தவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டாலும், இவர்களின் போராட்டம் தோல்வியில் முடிந்தது என்ற ஒரு தப்புக் கணக்கைப் போட்டுவிட முடியாது. ஏனெனில், தொழிலாளர்களின் போராட்டம் என்றைக்குமே தோல்வியில் முடிவது கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டங்களை நடத்த வேண்டியது மிக மிக அவசியம். இதனை தாற்பரியத்தைப் புரியாமல் தொழிலாளர் வர்க்கம் சிதறுண்டு கிடக்கிறது. ஆனல், இலங்கையைச் சேர்ந்த அகதிகள் போராட்டத்தை ஒரு வித துணிச்சலோடு நடத்தியிருக்கின்றார்கள். இந்தப் போராட்டத்தின் மூலம் இவர்கள் பெற்ற அனுபவங்கள் பல. இந்த அநுபவங்கள் நிச்சயமாக போராட்டத்தின் அடுத்த அங்கத்திற்கு உதவிபுரியக்கூடியன.

பிரான்ஸிலே பல நாட்டைச் சே ர்ந்த அகதிகள் வாழுகின்றார்கள். இவர்களின் பெரும்பான்மையானோர் முதலாளி வர்க்கத்திற்கெதிராகப் போர்க் கொடியைத் தூக்கும் விடயத்தில்சோர்ந்துபோயே காணப்படுகின்றனர். ஆனல், இலங்கை அகதித்தொழிலாளர்கள் மட்டும் சுறுசுறுப்புடன் தமது வரலாற்றுப் பங்களிப்பினைச் செய்திருக்கின்றார்கள். இனிமேலும் செய்வதற்குத்தயாராக இருக்கின்றார்கள்.

அவோபுவாத் கம்பனியின் நிர்வாகம் முழுக்க முழுக்க சட்டத்திற்குமுரணானது. இதேவேளையில், பிரெஞ்சுச் சட்டங்கள் அனைத்துமே முதலாளித்துவத்தை ஏதோ ஒரு வகையில் பாதுகாப்பவை. தொழிலாளர்களின் பக்கத்தில் பிரான்ஸின் மிகப் பெரும் தொழிற்சங்கமான சி.ஜே.தே நின்றது. ஆனல், முதலதளித்துவத்தின்பக்கம் அரசாங்கம். "டபிள்கேம்" போடும் பிரெஞ்சு நீதிபரிபாலனத்துறையின் உண்மைக்கோலத்தினை தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தின் மூலம் கண்டிருக்கிறார்கள்.

22, ஆம் பக்கம் பார்க்கவும் →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான நிதியுதவியை எதிர்த்து பாரிஸில் உண்ணாவிரதம்.

முதலாளித்துவ நாடுகள் கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி பாரிஸில் கூடி 1500கோடி ரூபாவை இலங்கையின் "அபிவிருத்திக்கு" வழங்கப்போவதாக ஒரு தீர்மானத்தை எடுத்தன.- இயேனு மெற்ரோவில் அமைந்துள்ள சர்வதேச நாணய நிதியத்த லைமையகத்தில் இவர்கள் ஒன்று கூடி சர்வதேச பயங்கரவாதத்தின் உண்மையான ஏஜென்டுகள் தாங்களே என பகிரங்கப்படுத்தி கொண்டார்கள். இன அழிப்பினை அடிப்படையாகக் கொண்ட இவர்களின் சந்திப்பிற்கு இந்தத் தடவை மனித உரிமை நிறுவனங்கள் தமது எதிர்ப்பினைக்காட்டின. அதாவது நூற்றுக் கணக்கானோர் சேர்ந்து நாணய நிதியத் தலைமையகத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். தமிழ் பேசும் மக்களோடு,பிரெஞ்சு மக்களும் இதில் கலந்து கொண்டனர். லியோனில் இருந்து அதிகமான பிரெஞ்சு மக்கள் வந்தார்கள்என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உண்ணாவிரதத்தை ஒழுங்கு செய்த அமைப்புக்கள், இன அழிப்பிற்கே 1500 கோடி ரூபாவும் வழங்கப்படுகின்றது என்பதை துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வெளி உலகிற்கு அம்பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

காலை 9.15மணிக்கு இலங்கையின் நிதி அமைச்சரான றொனி டீ மெல் எந்தவிதமான பிரச்சனையுமில்லாமல் தனது சகாக்களான பிரான்சில் இருக்கும் இலங்கைத் தூதுவர் பேர்னட் டீ சில்வா, அரசாங்க உயர் சிவில் அதிகாரி குமாரசாமி ஆகியோர் சகிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையகத்தின் உள்ளே நுழைத்தார்.

ஆனால், மதிய உணவு வேளையில், மூவரும் வெளியே வந்தபோது இலங்கைத் தூதுவர் உண்ணாவிரதமிருந்தவர்களைப் படமெடுக்குமாறு பட்டார். இது உண்ணாவிரதமிருந்தவர்கள் மத்தியில் ஒரு சலசலப்பை யுண்டுபண்ணியது. விளைவு, வெளியே வந்த அமைச்சர், மீண்டும் உள்ளே சென்று பின் கதவால் வெளியேறவேண்டிய ஒரு சூழல்ஏற் பட்டது. தூதுவர்தான் இந்தச் சலசலப்பிற்கும் முழுப் பொறுப் பாவார்.

ஒவ்வொரு வருடமும் முதலாளித்துவ நாடுகள் ஒன்று சேர்ந்து இலங்கையரசின் இன அழிப்பிற்கு உதவியாக நிதியனுப்பிவைப்பது வழக்கம். யப்பான் இந்தத்தடவை தனது உதவியை வழமையிலும் பார்க்க அதிகமாகக் கொடுத்துள்ளது. இலங்கைக்கு வழங்கும் உதவிகளை நோர்வே நிறுத்திவிட்டது என்று ஒரு கதையடிபட்-டாலும், நோர்வே பிரதிநிதியும் இதில் கலந்து கொண்டார்.

பத்திரிகையாளர்கள் பலர் வந்தனர். ஆனால், உண்ணாவிரத நடவடிக்கையை அவர்கள் தமது பாணியில் இருட்டிப்புச் செய்துகொண்டார்கள். ஆனால், இந்தியா வானொலி மட்டும் இந்நிகழ்வுக்குமுக்கியத்துவம் கொடுத்தது.

அகதிகளின் பூமி என்று புகழப்படும் பிரான்ஸ் இன்று சர்வதேச முதலாளித்துவக் கூடாரமாக மாறிவருவது உலக அமைதிற்கு அச்சுறுத்தலைத் தரத்தக்கதொன்றாகும்.

*****************************

# இலங்கைக்குள் இந்திய விமானங்கள்

பிரெஞ்சுத் தயாரிப்பான மிரஜ் 2000 என்ற யுத்த விமானத் துடன் இலங்கைக்குள் கடந்த மாதம் நுழைந்த இந்திய விமானப் படை தமிழ்பேசும் மக்களுக்கான உணவுப் பொருள்களை தமிழ்-பேசும் பகுதிகளில் இறக்கிவிட்டுச் சென்ற விடயம் பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அமைதியான முறையில் செஞ்சிலுவைச் சங் கப் படகுகள் மூலம் உணவினை இறக்க எடுத்த இந்தியாவின்முயற் சியை சிறீலங்கா அரசு தடுத்ததைத் தொடர்ந்தே இந்தியா - இந்த நடவடிக்கையை எடுத்தது. இந்தியாவின் நடவடிக்கையை - முதலாளித்துவ நாடுகள் கண்டித்துள்ள அதேவேளையில், சேவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் "ஒரு புத்திசாலித்தனமான நடவடிக்கை" எனப் பாராட்டியுள்ளார். சிறீலங்கா அரசு "இந்தியா சிறீலங்காவில் இறைமையில் கைவைத்துள்ளது" எனக் குற்றம்சாட் டியுள்ளது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இந்தியாவின் நடவடிக்கையினை அறிக்கை ஒன்றின் மூலம் பாராட்டியிருக்கின்றது.

*****************************************

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் தரும் ஈழச்-செய்திகளை தொலைபேசி மூலம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.

48-74-60-43.

*******************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் — செய்திகள்

* இலங்கை அரசின் திட்டமிட்ட பயங்கரவாதத்திற்கு ஈழமக்கள் தொடர்ந்தும் பலியாகிக் கொண்டு வருகின்றார்கள். கடந்த 4.6.87அன்று சேந்தான் குளப்பகுதியில் விமானத்தில்இருந்து குண்டுத் தாக்குதல் செய்யப்பட்டதை தொடர்ந்து 25பேர் கொல்லப்பட்டனர், பலர் படுகாயமடைந்தனர்.

* நீர்வேலிப் பகுதியில் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது, நீர்வேலி கந்தசாமி கோவிலில் தஞ்சம் புகுந்திருந்தபல அகதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

* திருமலையில் தேடுதல் வேட்டை நடத்திய இலங்கையரசின்கூலி படையினர் தமிழ் பேசும் மக்கள் 20 பேரை உயிருடன்எரித்துக் கொன்றுள்ளனர்.

* 7.6.87அன்று பூசா முகாமில், உணவுவேளையின் போது 7 தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தப்பியோட முயற்சித்த வேளையிலேயே சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என இனவாத அரசு பொய்பிரசாரத்தைக் கட்டி விட்டுள்ளது.

* ஊரடங்குச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபின் அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் 100க்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

* 8.6.87அன்று மட்டக்களப்பில் 6 தமிழ்பேசும் மக்கள்இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனை எதிர்த்துக் தமிழ், முஸ்லீம் மக்கள் கர்த்தாலொன்றினை நடத்தியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அச்சுவேலி புனித திரேசா கன்னியர் மடத்தை இராணுவ முகாமாக வைத்திருந்த கூலிப் படைகள் அதனை விட்டுச்சென் றபோது, அங்கு 12 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

* கைதடியில் ஒழித்திருந்த கூலிப்படை இந்துக்குரு உட்பட நால் வரை சுட்டுக்கொன்றுள்ளது.

* இந்தியாவிற்கு தப்பிச்சென்ற அகதிகளின் படகொன்று சிறீ லங்கா கூலிப் படைகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இந் தப் படகில் சென்றவர்களிற்கு என்ன நேர்ந்தது என்பது இன் னமும் மர்மமாகவே இருக்கின்றது.

* காரைநகர், காங்கேசன்துறை, பலாலி ஆகிய பகுதிகளில்வா மும் மக்களில் பலர் செல் தாக்குதலுக்குப்பலியாகியுள்ளனர்.

* 17.6.87 அன்று பூசா முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட சின் னத்தம்பி என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். சிறைச் சித்திரவதையே இவரது மரணத்திற்குக் காரணம்.

* 21.6.87அன்று கிழக்கு மகாணத்தில் உள்ள கிராலில் கூலிப் படைகள் தேடுதல் வேட்டை நடத்தியபோது 4 தமிழ்பேசும் மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

* செல் தாக்குதலிற்கு செல்வி ராதா என்னும் பெண் எழுத்தா ளர் பலியாகியுள்ளார்.

* உடுப்பிட்டியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருசிறுவனும் சிறுமியும் கெலிகொப்டர் தாக்குதலுக்கு பலியாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சர்வதேச மன்னிப்புச் சபை இறுதியாக வெளியிட்ட அறிக்கையில் 591 தமிழ் பேசும் மக்களைகாணாமல் போனவர்கள்பட்டியலில் சேர்த்துள்ளது.

* 24.6.87 அன்று பூசாமுகாமில் நான்கு தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர்.

* 7.7.87அன்று வவுனியாவில் உள்ள ஆனந்த புளியங்குளத்தில்4 தமிழர்கள் கூலிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

* 3.7.87அன்று மட்டக்களப்பில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த அப்பாவி விவசாய மக்கள் 5பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

* 4.7.87அன்று அடம்பனில் வசிக்கும் இருவர் கூலிப்படையின் வெறியாட்டத்திற்குப் பலியாகியுள்ளனர்.

* நயினமடு என்ற இடத்தில் 5பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

*8.7.87அன்று அடம்பனிலிருந்து வவுனியா நோக்கி வந்துகொகொண்டிருந்த இராணுவம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வரை வழியில் சுட்டுக்கொன்றுள்ளது. அத்துடன், படுகாமத்தில் 4 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 132பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

* 11.7.87அன்று கரவெட்டியில் வீரகத்தி என்பவரும்,நெல்லியடியில் 75 வயதுடைய பெண்மணி ஒருத்தியும்,வல்வெட்டித்துறையில் 5 முதியோரும்,1பெண்ணும்,மந்திகையில் அரசகிராமசேவகர் ஒருவரும் கூலிப்படையின் வெறியாட்டத்திற்குப் பலியானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பலவீனங்கள் தகரட்டும்

இயக்கங்கள் எல்லாம் பலவீனப் பட்டுக் கிடக்கும் ஒரு விபரீதமான தன்மையை இன்று ஈழப் போராட்டத்தில் அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இது எந்த விதத்திலும் போராட்டத்திற்கு வலிமையைக் கொடுக்கக் கூடிய ஒன்றல்ல. போராட்டம் நீண்டது என்று நாம் சொல்லும் போது முதலாளித்துவம் போடும் நெருக்குவாரம்தான் போராட்டத்தை நீட்டுகின்றது. என்று மட்டும் நாம் ஒரு தவறன கணிப்பினைப் போட்டு விடமுடியாது. இங்கே போராடும் சக்திகள் போடும் குழறுபடிகளும் கவனத்திற்கு எடுக்கப் படவேண்டும். இந்த இரண்டு பக்கத்தின் தளங்களையும் ஆய்விற்கொண்டே போராட்டம் நீண்டது என்று சொல்லப்படுகின்றது. இயக்கங்களிற்குள் கிளைவிட்டுச் சடைத்த நானு? நீயா? போட்டிதான் சிறிலங்கா இராணுவம் தமிழ்பேசும் பிரதேசங்களிற்கும் தனது கால்களைச் சுதந்திரமாக வைத்து ராஜபவனி போடும் ஒரு நிலைக்குக் காரணியாக இருந்திருக்கின்றது. இனவாத அரசின் பிரதம ஆலோசகரான லலித் அத்துலத் முதலி தமிழ் பேசும் நிலத்துக்குள் வந்து, சுதந்திரமாக தமிழ் பேசும் மக்களுடன் பேசிவிட்டுப் போகின்றர் என்றல் அது ஒரு சாதாரண வழிவமாகக் கொள்ளத் தக்கதொன்றல்ல. இயக்கங்கள் பலவீனப்பட்ட தன்மையை ஏகாதிபத்தியம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றது. ஆனல் இயக்கங்களின் பக்கத்திலோ, போராளிகளின் கரங்களாலேயே போராளிகள் கொல்லப்படும் கோரப் போக்குத் தொடர்கின்றது.

நடு நிலைமையாக நிற்பவர்கள், இயக்கங்களிற்குக் கொடுத்த எச்சரிக்கைகளும், அறிவுரைகளும் தமது எல்லையைக் கடந்து விட்டன. பொதுமக்களின் கருத்துக்கள் எதையுமே தமது கருத்துக்கு எடுக்காமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்கள் தான் தோன்றித் தனமாக நடந்துகொண் டன. என்பதை எவருமே இலகுவில் மறைத்துவிட முடியாது. இத்தகைய ஒரு கட்டத்தில் எமக்குப் போர் தேவையா? எதற்காக ஒரு போர்? எங்களது முடிவு எதாக இருக்கும் என்ற கேள்விகளெல்லாம் எழுந்து கொண்டிருக்கின்றன. போர் பற்றிய ஒரு தெளிவின்மைதான் இந்தச் சந்தேகங் களிற்கு அடிப்படை என்று கொள்வோமாயின் அது வெறு மனே ஒரு சாட்டாக இருக்கமாட்டாது.

தொடக்கப்பட்ட போரை விட்டுக்கொ டுக்க முடியாது. ஏனெனில் இன அழிப்பே தனது ஒரேயொரு இலட்சியம் என்று கொண்டிருக்கின்றது, சிறிலங்கா அரசு. இலங்கை முழுவதுமான ஒரு பாட்டாளிவர்க்க எழுச்சியை உருவாக்க முடியாத ஒரு சூழல் இருக்கும் வரை, தமிழ் பேசும் மக்கள் தங்களுக்கான ஒரு தனிநாட்டைக் கேட்க வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படும் நிலை நீண்டு கொண்டே போகும்.

முதலாளித்துவம் தன்னைத் தயார்படுத்தி வைத்திருக்கும் அளவிற்கு, போராடும் வர்க்கம் தன்னைத் தயார்ப்படுத்தி வைத்திருக்காத தன்மை ஈழப்போராட்டத் தில் மட்டுமல்ல. இன்று உலகின் அனைத்துப் போராட்ட அமைப்புகளிடையேயும் காணப்படும் பொதுக் குணம்சமா கும்.

போராட்டத்தில் ஒரு குதிரைப்பாய்ச்சலைக் காட்டி இன்று இயக்கங்கள் களைத்துப் போயிருக்கின்றன. இயக்கங்கள் தங்களது நிலையைத் தெளிவுபடுத்தவேண் டிய ஒரு தேவை இன்று இருக்கின்றது. போராட்டத்தை ஒரு கடமையாகக் கருதாமல், ஒரு "பூச்சாண்டி" யாக்கிக் கொண்டிருப்பதிலும் பார்க்க தங்கள் நிலையைத் தெளிவு படுத்துவது பல வகையிலும் ஈழப்போராட்டத்திற்கு உதவும். ஐக்கியம் என்ற தளத்தில் நின்று போராடுவதன் மூலமே வெற்றி கிடைக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுவதற்கு இன்னமும் காலம் பிந்திவிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணமல் போன பையன்

- ஒரு நம்பிக்கையோடு,
- அவள் தனது பையனுக்காகக் காத்திருந்தாள்,
நேரம் விரைவாக ஓடியது.
கிராமம் தூக்கத்தில் ஆழ்ந்தது,
ஆனால், அவள்
தனது பையனுக்காகக் காத்திருந்தாள்.
ஒரு இலைதளிர்காலச் சூரியனைப் போல
அவன் அழகானவன்,
ஒரு வசந்தகால இரவைப் போல
அவன் மிருதுவானவன்
ஆனால், எங்கே அவன்?

அவள் காத்திருந்தாள்,
அவள் காத்திருந்தாள்,
தனது 14 வயதுப் பையனுக்காக,
நேரம் அவளின் உடலைக் குத்தியது,
மழை உடலை முத்தமிட்டது,
ஒரு நாயின் குரையல்
அவளின் காதுகளுக்குள் நுழைந்தன.
தூக்கமில்லாத விழிகள்
பையனைத் தேடின.
ஆனால், எங்கே அவன்?
அவளுக்கு நம்பிக்கையைத் தர
எவருமேயில்லை.

மழை நின்றபோது
இன்னொரு மழை
அவளின் விழிகளை நனைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் விரைவாகக் கடந்து போனது.
அவளுக்குத் தெரியவேயில்லை.
இரவின் திரை திறபட்டது.
ஆனல், அவள்.......அந்த அன்னை.......
தனது பையனுக்காகக் காத்திருந்தாள்.

அவள் அம்மாக்களைப் பார்த்தாள்.
அவள்கள், அயலவர்கள்,
அவள்களும், பிரச்சினைகளும்.
அவள்கள் அவளை மறந்துபோனர்கள்
ஆனல், அவள்.......
தனது பையனுக்காகக் காத்திருந்தாள்.

இரவினைப் போல,
பகலும் விரைவாகக் கடந்தது.
ஆனல், அவள்
பையனை மட்டுமே சிந்தித்த வண்ணமிருந்தாள்.
அவள் காத்திருந்தாள்,
நீண்டநேரம் காத்திருந்தாள்,
பையன் வரவேயில்லை.
ஆனல்
இன்னொரு இரவும் வந்தது.

~ மோகன் ~

[கடந்தமாத தமிழ்முரசின் பிரெஞ்சு வெளியீட்டில்
இடம்பெற்ற கவிதையின் தமிழ்வடிவமே இதுவாகும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்டிஸ்தான் போராளிகள் பாரிஸில் கைது.

MAUBERT-MUTUALITE, மெற்றோவில் கடந்த 12ஆம் திகதி யூலை மாதம், குர்க்கிய நன்பர்கள் இருவருடன் இறங்கியபோது மூவரையும் பிரெஞ்சுப் பொலீஸ் மறித்தது.
"விசாக்களைக் காட்டவும்." இது பொலீசாரின் உத்தரவு,நாங்கள் விசாக்களைக் காட்டினோம்.

"இன்றைய தினம் நடக்கவிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் தடை செய்யப்பட்டுள்ளது. உத்தரவையும் மீறி வெளியே செல்ல முயன்றால், நீங்கள் கைது செய்யப்படுவீர்கள். நீங்கள் மெற்றோவை எடுத்து உங்கள் வீடு போய்ச் சேரவேண்டியதுதான்."

எங்களுக்கு மட்டுமல்ல, மெற்றோவில் இறங்கிய அத்தனை குர்க்கியர்களும், மெற்றோவில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டனர்.

குர்டிஷ்தானுக்காகப் போராடும், குர்க்கியர்கள் வருடாவருடம் MUTUALITE, மண்டபத்தில் ஒன்று கூடுவது வழக்கம். இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள ஐரோப்பா முழுவதிலும் வாழும் குர்க்கிய அகதிகள் வருவதுண்டு. ஆனல், இந்தத்தடவை தான் முதல் தடவையாக, சந்திப்பு தடைசெய்யப்பட்டுள்ளது.

எனக்கு அருகே நின்ற குர்க்கிய நண்பனுக்கு எப்படியாவது வெளியே சென்று, என்ன நடக்கின்றது என்பதைப் பார்த்து விட வேண்டும் என்ற துடிப்பு. நாங்கள் மெற்றோவினை எடுத்து ODEON.இன்று வந்து இறங்கினோம். அதிலிருந்தது மண்டபத்தைநோக்கி நடந்து செல்லமுடியும். மெற்றோவிற்கு வெளியே வந்தபோது, பார்த்த இடமெங்கும் பிரெஞ்சுப் பாதுகாப்புத் தலைகள் தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியோரமெங்கும் கூர்க்கியர்கள் உலவிக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு கூர்க்கியரும், விசாப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்களது முகங்களிலெல்லாம் ஏமாற்றம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

"பிரான்ஸில் ஜனநாயகம் செத்துவிட்டது.
இது ஒரு பாஸிஸ்ட் அரசாங்கம்."

தெருவால் கூர்க்கியன் ஒருவன் இவ்விதம் சத்தமிட்டுக்கொண்டு, சென்றது எனது காதில் விழுந்தது.

MUTUALITE. மண்டபத்தை நோக்கிய வீதி முழுக்க பொலீஸ்வாகனங்கள் முண்டியடித்துக் கொண்டு நின்றன. ஒரு கபேஇற்கு முன்னால் நாமும், கூர்க்கிய நண்பனும் உட்கார்ந்து கொண்டோம். எங்களுக்கு முன்னால் இரண்டு விமனேட்டுக்கள் கிடந்தன.
நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

"அதோ எனது சகோதரன் வந்து கொண்டிருக்கிறான்"

என்று சொன்னான். எனக்கு அருகிலிருந்த கூர்க்கிய நண்பன் அவன் எழுந்து நின்று தனது சகோதரனை நாங்கள் நின்ற . . . பக்கம் அழைத்தான். சகோதரன் இன்னொரு நண்பனோடு வந்து எங்களுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டான்.

"இன்றைக்கு ஆர்ப்பாட்டம் நடக்குமா?"
நான் கேட்டேன்.

"பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்."
பதில் இப்படிக் கிடைத்தது.

கூர்க்கியர்களின் போராட்டமும் ஈழப்போராட்டத்தைப் போன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றதே. துருக்கியின் ஒரு பகுதியில் வாழும் இவர்களுக்கு என்று தனித்த மொழியொன்று உண்டு. இவர்கள் தமது சொந்தமொழியைப் பேசுவதும், எழுதுவதும் துருக்கி அரசினால் தடுக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவ பலத்துடன் இந்த இனத்தை அழிக்கும் முயற்சியில் துருக்கிய அரசு ஈடுபட்டுள்ளது. இந்த இன அழிப்புக்கெதிராக கூர்க்கியர்கள் கடந்த பல ஆண்டுகளாக ஒரு பாரிய போராட்டத்தை நடத்திவருகின்றார்கள். தமிழ் பேசும் மக்கள் ஈழம் கேட்பதைப் போன்று கூர்க்கியர்கள் குர்டிஸ்தான் என்ற தனி இராஜ்யத்திற்காகப் போராடுகின்றார்கள். ஈழப்போராட்டத்தில் பல இயக்கங்கள் இருப்பதைப் போன்று குர்டிஸ்தான், போராட்டத்திலும் பல இயக்கங்கள் இருக்கின்றன. இப்போராட்டத்தில் அதிக பலத்தைப் பெற்றிருக்கும் அமைப்பு, கூர்க்கியத் தொழிலாளர் இயக்கமாகும். இந்த இயக்கம் தான் பிரஸ்தாப சந்திப்பினை ஒழுங்குபண்ணியிருந்தது. கூர்க்கியர்களின் போராட்டத்தில், ஒரு இறுக்கமான தொழிலாள வர்க்க விழிப் புணர்வு மேலோங்கி இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கபேயில் பேசிக் கொண்டிருந்தபோது, கூர்க்கிய நண்பர்கள்தங்களது போராட்டத்தை இவ்விதம் விளக்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென ஒரு கூர்க்கிய இளைஞன் எங்களுக்கு முன் வந்து, மெற்றோவாசலை நோக்கிச் செல்லுமாறு கூறிவிட்டு ஓடினான். நாங்கள் மெற்றோ வாசலை நோக்கி ஓடிக்கொண்டிருந்த போது கலகம் அடக்கும் பிரெஞ்சுப் படை ஒரு கூட்டத்தைத் துரத்திக், கொண்டு சென்றது. எங்கும் பரபரப்பு, திகில், கலகம் அடக்கும் படையினர் தமது கையில் இருந்த தடியினால், அந்தக்கூட்டத்தை அடித்து விரட்டினர். கூட்டத்திற்குள் இருந்த ஒருவன்,

"குர்டிஸ்தான் வெல்க." என்று உரத்துச் சத்தமிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகம் அடக்கும் படை பாய்ந்து அவர்களை பிடித்தது. அவன் "குர்டிஸ்தான் வாழ்க." - என்று கத்திக் கொண்டே திமிறினன். வனைத்துப்பிடித்து அவனது கையில் விலங்கினைப் போட்டு இழுத்துக் கொண்டு சென்றார்கள்.

மெற்ரோ வாசலுக்கு முன்- துரத்திச் செல்லப்பட்ட கூட்டம், கலகம் அடக்கும் படையால் பிடிக்கப்பட்டு வைத்திருந்தினர். பிடித்து வைத்த கூட்டத்துக்குள், தாய்மார் தங்கள் கைக்குழந்தைகளோடு நின்றனர். வீதியில் நின்ற பாதசாரிகள் வியப் - போடு அந்தக் காட்சியை பார்த்துக் கொண்டு நின்றனர். சில நிமிடங்களின் பின் இரண்டு பெரிய பொலீஸ் வாகனங்கள் மெற்ரோ வாசலுக்கு முன் வந்து நின்றன. பிடித்து வைக்கப் - பட்ட கூர்க்கியர்கள் வாகனத்துக்குள் ஏற்றப்பட்டனர். இரண்டு வாகனமும் நிரம்பியது.

"எனது சகோதரனும் பிடிபட்டு வாகனத்துக்குள் ஏற்றப்பட்டுவிட்டான்."

எனக்கு அருகில் நின்ற நண்பன் சொன்னன்.

வாகனத்துக்குள் நின்றவர்கள் தமது கையை வெளியே நீட்டிய, போதெல்லாம் அவர்களது கையினை பொலீஸாரின் குண்டாந்தடிகள் பதம்பார்த்தன.

"குர்டிஸ்தான் வெல்க."

என்ற சத்தத்துடன் வாகனம் புறப்பட்டது.

இந்த அநுபவம் பிரெஞ்சு முதலாளித்துவத்தின் சமகால மனித உரிமை மீறலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அடக்கப்படும் மக்களின் எழுச்சிகளை இந்தத் தடைகளின் மூலம் அழித்துவிடமுடியாது என்ற உண்மையையே வீடு திரும்பும் போது எனது மனதில் பளிச் சிட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

→ 7-ஆம் பக்கத் தொடர்ச்சி.

அவோபுவாத் தொழிலாளர் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை. இவர்கள் தமது தொழில் உரிமைகளுக்காகப் போராடிய அதேவேளையில், இங்கு வாழும் அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமது போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார்கள். ஒவ்பிராவினை கண்டு இவர்கள் அஞ்சவில்லை. பொலிஸ் நிலையங்களைக் கண்டு அஞ்சவில்லை. ஆகவே இவர்களின் போராட்டபலமாயிருந்தது.

பிரான்ஸில் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் பாரிய அளவில் எதிர்கொள்ளும் விசாப் பிரச்சனை விடயத்தில் இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் - பிரெஞ்சு அரசுடன் எதிர்கொண்ட நேரடியான மோதலாகும். மூன்று தொழிலாளர்களிற்கு நாடுகடத்தும் உத்தரவுகளைப் பிரெஞ்சு அரசாங்கம் வழங்கியபோது -

நாடு கடத்தும் முடிவு மனித உரிமைகளுக்கு முற்றிலும் எதிரானது என்ற அடிப்படையில் அந்த உத்தரவுகளை எதிர்த்து அவோபுவாத் தொழிலாளர்கள் போராட்டத்தை முடுக்கிறார்கள். முதலில் பொலிஸ் நிலையங்கள் இணங்க மறுத்தன. ஆனால், போராட்டத்தின் வேகம் அதிகரித்ததைக் கண்டு தமது முடிவுகளை மாற்றி மூன்று பேருக்கும் தற்காலிக விசாக்கள் வழங்கப்பட்டன. இது ஒரு பாரிய வெற்றியாகும்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் இவர்கள் ஒன்று கூடி மீண்டும் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு உறுதி பூண்டிருக்கின்றார்கள். இவர்களின் தீரம் பாராட்டத்தக்கது. இந்தத் தீரம் ஏனைய போராட்டங்களிற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்.

# ஐரோப்பிய இலக்கிய ஊழல்கள்!

பாரிஸில் வாழும் இலங்கைத் தமிழ் இளசுகளிடையே இப்போது இலக்கிய ஆர்வம் ஊற்றெடுத்துக் கொண்டிருக்கின்றது. இது மகிழ்ச்சிக்குரிய விடயமே. ஆனல், இந்த ஆர்வத்தின் அறுவடைகளாக, வெளியே வந்து கொண்டிருப்பவை ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு எந்த வகையில் ஆரோக்கியத்தைக் கொடுக்கப்போகின்றது என்று பார்த்தால், ஏமாற்றமே எமக்கு முன் தோன்றுகின்றது. இலக்கியங்கள் என்றபெயரில் மசாலாக்கள் வெளியே வந்து கொண்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, தரமான இலக்கிய சஞ்சிகைகள் இங்கே இல்லை. இரண்டாவது, தரமான இலக்கிய விமர்சனங்கள் வருவதில்லை. புரட்சியின் தளமான பாரிஸில் வாழும் ஈழத்து இளசுகளால் புரட்சிகரமான எழுத்துக்களைக் - கொண்டு வரமுடியாமலிருக்கின்றன. ஈழத்திலே வாழும் இளசுகள் புரட்சியினையும், புதுமையினையும் தங்கள் எழுத்துக்களில் படைத்து கொண்டிருக்கும் போது, இங்கு வாழும் இளசுகள் மசாலா இலக்கியம் படைப்பதில் தங்கள் பொன்னன நேரத்தை வீணக்கிக்கொ கொண்டிருப்பது வேதனைக்குரியதேயாகும்.

ஏதோ புத்தகம் ஒன்றை வெளியிட்டுவிட்டால் இலக்கிய உலகிற்கு பெரிய சேவையைச் செய்துவிட முடியும் என்று இவர்கள் கருதுகிறார்கள் போலும். வெளியீடுகளில் கலை, கனதி காரம் இருக்க வேண்டும் என்ற உண்மையை இவர்கள் மறந்துபோய் விடுவது இவர்களின் வளர்ச்சிக்குக் குந்தகத்தை உண்டுபண்ணக் கூடியது. இலக்கியம் ஒரு வித்தையல்ல, ஆனல், அது ஒரு தவம் என்ற உண்மையைப் புறக்கணித்துவிட்டு அந்தத் துறையில் சாதனைகளைச் செய்வது கடினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவரும் சஞ்சிகைகளை எடுத்துப்பார்க்கையில் அவைகளைச் சஞ்சிகை என்ற பரிமாணத்துக்குள் அடக்கமுடியாமல் இருக்கின்றது.. கதைகள், கட்டுரைகள், கவிதைகள் விமர்சனங்களில் ஒருமுழுமையைக் காணுவது அரிதாயுள்ளது. உள்ளடக்கம் படு "ஆபாசம்" என்று தான் சொல்ல வேண்டும். பாரிசில் முற்று முழுமையான முற்போக்கு இலக்கியங்களே படைக்கப்படுவதில்லை என்றுசொல்லமுடியாது. ஆனல், பிற்போக்கு- அரைகுறை இலக்கியங்கள்புற்றீசல் போலப் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஈழத்து இலக்கியப் படைப்புக்களில் ஒரு கனதியும், காரமும்இருக்கின்றது என்பது கண்கட்டு. ஆனல், பாரிஸில் பொதுவாகஐரோ-ப்பாவில் இருந்து தரமான சிருஷ்டி இலக்கியங்கள் எதுவும் இன்னமும் வரவில்லை என்று தான் கூறவேண்டும்.

இந்த அவலமான போக்கிற்கு அடிப்படைக் காரணமாகஅமைவது இலக்கியத்தை ஆழமாகப் பார்க்காத ஒரு தன்மையாகும். ஐரோப்பிய யதார்த்தத்தை இங்கிருந்து வெளியாகும் சிருஷ்டிகள் இன்னமும் சரியாகப் படம் பிடிக்கவில்லை. யதார்த்தத்திலும் இரண்டு வகை உண்டு. அக யதார்த்தம். புற யதார்த்தம். எங்களது இலக்கியவாதிகள் படம் பிடித்துக்காட்டுவது புறயதார்த்-தத்தை-மட்டுமே. அக யதார்த்தம் இவர்களுக்கு தெரியும். ஆனலும், சமூகக் கட்டுக்கோப்புக்களுக்கு "பயப்பிடுபவர்களாக" இருப்பதனல் அந்தப்பக்கம் இவர்கள் தலையைக் கூடவைப்பதுகிடையாது.

ஒரு இலக்கியவாதி எதையும் எழுதலாம். எழுத்தை ஆயுதமாகத் தூக்கிக் கொண்டவன் சுதந்திரமானவன். ஆனல், ரோமாபுரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியெரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னனாக அவன் இருக்கக் கூடாது. எங்களது இலக்கியத்தின் இன்றைய அத்தியாயம் போர்க்காலம். இந்த அத்தியாயம் மிகவும் இலகுவாக-எழுதிமுடிக்கத்தக்கதொன்றல்ல. இந்த இலக்கியம் வெறுமனேரசனையை மட்டுமே கருத்தில் கொண்டதல்ல. ஒரு இனத்தின் விடுதலைப் போருக்கு உதவக்கூடியதாகும். ஆனால், இத்தகைய இலக்கியங்களை உருவாக்குவதில் ஐரோப்பா வாழ் ஈழத்து இலக்கியவாதிகள் இன்னமும் பிந்திக் கொண்டே உள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்கள் இராணுவக் காடையர்களினால் இழுத்துக் கொண்டு சொல்லப்படும் வேளையில் இவர்கள், குழந்தைகளை, குறைவாகப் பெறுவது எப்படி என்ற மந்திரங்களை எழுதுகின்றார்கள். பெண்ணடிமைத்தனத்திலிருந்து மீட்சி பெறுவது மீள்வதற்குரிய வழிகளைக் காட்ட வேண்டிய தேவை இருக்கும் அதே வேளையில் பெண்ணுக்கழகு- "சிச்சின் டிப்பாட்மென்ற்களை" கவனித்தல், என்ற போதனைகளைச் சொல்லுகின்றார்கள். இவைகள் இலக்கியங்கள் அல்ல. இலக்கியத்தின் அடிப்படைப் பயனை மறுதலிக்கும் - "சூத்துமாத்து" குறைப்பிரசவ எழுத்துக்கள்.

தங்களை இலக்கியவாதிகளாகக் காட்ட வேண்டும் என்ற ஒரு விபரீதமான ஆர்வம் தலையெடுத்துக் கொண்டிருப்பது ஐரோப்பிய இலக்கிய வட்டத்தினரின் ஒரு பொதுவான அம்சமாகும்.

இலக்கியம் சக்தி வாய்ந்தது. நாம் இந்தச் சக்தி வாய்ந்தஆயுதத்தை மனிதத்தின் உயிர்ப்புக்காகப் பயன்படுத்த வேண்டும். அனுராதாவின் பாவாடை அரை இஞ்சியில் கிழிந்ததா, முக்கால்இஞ்சியில் கிழிந்ததா என்ற ஆராய்ச்சியோ, ரஜனிகாந் நடித்த, படத்திற்கா மோகன் நடித்த படத்திற்கா மக்கள் திரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுகின்றார்கள் என்ற ஆராய்ச்சியோ எமது எழுத்துக்கு எந்த விதத்திலும் ஆரோக்கியத்தைக் கொண்டுவராது.

ஜனரஞ்சகம் என்ற பெயரில் குப்பைகளை எமது மக்களுக்கு நாம் தீனியாகப் போடக்கூடாது. எமது மக்களுக்கு ஆரோக்கியமான தீனி தேவை. அதுவே இலக்கியத்தின், எழுத்தின் உண்மையான பயனைக் கொண்டுவரத்தக்கதாகும்.

---

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் வெளியீடாகிய "ஈழச் செய்தி"

வெளிவந்துள்ளது. EPIC. பிரான்சுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

தோழர்களே.

ஈழப்போராட்டம் நெருக்கடியான காலகட்டத்தினுள் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில் போராட்டத்தை நெறிப்படுத்தவும், போராட்டத்துக்குப் பங்களிப்புச் செய்யவும் வேண்டிய வரலாற்றுக்கடமை எம்மைச் சூழ்ந்துள்ளது. இத்தகைய ஒரு சிக்கலான காலகட்டத்தில் 'தமிழ் முரசு' தனது பங்களிப்பைச் சரிவரச் செய்யவும் ....அகதிகளாய் வாழ்ந்தாலும் தேசத்தின் விடுதலையின்பால் நாம் ஆர்வமுடையோர் என்பதை நிருபிக்கவும் தமிழ் முரசை வளர்த்தெடுங்கள். உங்கள் அனைத்துத் தொடர்புகட்கும்........

EDITOR.
'TAMIL MURASU'
EPIC
10, RUE DES MARTYRS.
75009 - PARIS.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் குதிரை

எங்களிடமொரு
குதிரை
இருந்தது.

நாங்கள்
அயர்ந்த சமயத்தில்
வந்த
அன்னியர்கள்
அதை
அபகரித்துக் கொண்டார்கள்.

சுலபமாக
வசப்பட்ட குதிரை
அவர்கள்
சொன்னபடி கேட்டது.
அப்போது நாங்கள்
மயக்கத்தி லிருந்தோம்!

□□

கண்ணீரைத் தெளித்தே
மயக்கத்தைக் கலைத்தோம்
எங்கள்
குருதியைச் சொரிந்தே
ஒரு
யாகத்தை வளர்த்தோம்!
செங்கோட்டையில்
எங்கள் கொடி
ஏறியபோது...

எங்கள் குதிரையிலிருந்து
அவர்கள்
இறங்கினார்கள்.

□□

இழந்த குதிரையை
அடைந்து விட்டோம் என்ற
எக்களிப்போடு
பாய்ந்தேறி அதன்மீது
பயணம் தொடங்கினோம்.

□□

காலங்கள் கொஞ்சம்
கடந்த பிறகு
எங்கள்
முதுகெலும்புகள்
முறியத் தொடங்கின.

காரணம் தெரியாமல்
கலங்கினோம்.

□□

கூட்டங்கள் போட்டோம்
மாநாடு கூட்டினோம்
எலும்புகள் முறிகிற
சத்தம்
காதில் விழாதபடி
கைதட்டினோம்.

□□

கடைசியில் ஒரு வழியாகக்
கண்டுபிடித்தோம்:

குதிரையின் மீது
நாங்கள்
சவாரி செய்யவில்லை...

எங்கள் மீதுதான்
அது
சவாரி செய்கிறது
என்று!

ஶ்ரீ. மேத்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## இந்திரா காங்கிரஸ் ஹரியானாவில் படுதோல்வி.

வட இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் நடைபெற்றசட்டசபைத் தேர்தலில் இந்தியாப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியின் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் படு தோல்வி அடைந்துள்ளது.

90 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட சபைத் தேர்தலில் . 57 இடங்களை லோக்தாள் கட்சி தனியாகக் கைப்பற்றி உள்ளது. இந்திரா காங்கிரஸ் 10%இற்கும் குறைவான இடங்களில் மாத்திரமே வெற்றிபெற்றுள்ளது. காங்கிரஸின் இத்தோல்விவரலாற்றில் சந்தித்திராத தோல்வி என வர்ணிக்கப்படுகின்றது. இந்தியாவின் 25 மாநிலங்களில் காங்கிரஸின் பிடியை விட்டு விலகி உள்ள 11வது மாநிலமாக ஹரியானா விளங்குகின்றது. காங்கிரஸின் கோட்டைகள் என வருணிக்கப்பட்ட இந்தி பேசும் மாநிலங்களில் ஹரியானாவும் ஒன்று என்பதால் தான் காங்கிரஸின் - தோல்வி முக்கிய அவதானத்திற்குரியதாக இருக்கின்றது. பஞ்சாப் பிரச்சனைக்கான தீர்வில் ஹரியானா மாநிலத்தின் தலைநகரான சண்டிக்காரை பஞ்சாப்பிற்கு வழங்க ராஜீவ் காந்தி ஒத்துக் கொண்ட விடயம் தோல்விக்கு முக்கிய காரணியாக இருந்திருக்கலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

தென் மாநிலங்களான கர்நாடகம், கேரளம்,தமிழ்நாடு, ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஆதரவை இழந்து இருக்கின்ற இந்திரா காங்கிரஸ் தற்போது வட இந்தியா மாநிலங்களிலும் ஆதரவை இழக்க தொடங்கியுள்ளது. இந்த இழப்புக்கள் ராஜீவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியின் அரசாங்கம் அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றிபெறுமாவென்ற ஐயப்பாட்டை தோற்றுவித்திருக்கின்றது.

தென் கொரியாவில் பாரிய அரசியல் நெருக்கடி.

தென்கொரியாவில் அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கோரி பல இலட்சக்கணக்கான மாணவர்கள்ஜனாதிபதி சுன் டு ஹ வானின் அரசுக்கெதிரான போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர். அமெரிக்கா அரசின் தலையாட்டும் தலைவர்களாக இருந்த பிலிப்பைன்ஸ் நாட்டின் மார்கோஸ், ஹெயிட்டி - நாட்டின் டுவாலியர் ஆகியோரின் நிலைக்கு தென்கொரியா ஜனாதிபதி தள்ளப்படக்கூடும் என்று கணிப்பிடப்படுகின்றது.

இராணுவச் சதியொன்றைத் தொடர்ந்து 1980ம் ஆண்டில் பதவியேற்ற ஜனாதிபதி சந்திக்கும் மிகப் பெரிய அரசியல் நெருக்கடியாக இது வர்ணிக்கப்படுகின்றது.

எதிர்க் கட்சியினரின் கோரிக்கைகளை ஏற்று நேரடி ஜனாதிபதி தேர்தல் முறை அமுலுக்குச் கொண்டுவருவது உட்பட 8 அம்சக் கோரிக்கைகளிற்கு தற்போதைய ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

இதேவேளை தென் கொரியாவின் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் பொலிசார் நிலைமைகளை சமாளிக்கும்பொருட்டு கடமையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய கம்யூனிஸ்டுக் கட்சி சீனாவை நோக்கி விஜயம்

இஸ்ரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுக்குழு ஒன்று 20 வருடகாலத்தின் பின்னர் முதற் தடவையாக சீனத் தலைவர்களுடன்பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை நடாத்தியுள்ளது. மத்திய கிழக்கு நெருக்கடிக்குத்தீர் வுகாணும் முகமாக கூட்டப்பட் இருக்கும் சர்வதேச மகாநா டுசம்பந்தமாகவும் பேச்சுக்கள் இடம் பெற்றிருந்ததாக இஸ்ரே லிய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நாயகம் மெயிர் வில்னர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய கம்யூனிஸ்ட் கட்சித் தூதுக்குழுவினர் இறுதியாக1956 இல் சீனவுக்கு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயம் இரண்டு நாடுகளினதும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடை யிலான உறவைப் பலப்படுத்தும் என இரண்டு நாட்டுக் கம்யூனிஸ் கட்சிகளும் கருத்துத் தெரிவித்துள்ளன.

## பாப்பரசர் - வால்ஹெய்ம்
## ஒரு கசப்பான சந்திப்பு

ஜுன் 25ம் திகதி பாப்பரசரை ஆஸ்திரிய ஜனுதிபதி வத்திக் - கான் சென்று சந்தித்துப் பேசியுள்ளார். இச் சந்திப்பின் மூலம் கடந்த ஒரு வருட கால. சர்வதேச தனிமைப்பாட்டைத் தகர்த்தெறிந்துள்ளார்.

நாஜிப் போர்க் குற்றங்களில் சம்பந்தப்பட்டிருந்ததாக தெரிவி கப்பட்ட குற்றச்சாட்டுக்கு மத்தியில்12 மாதங்கட்கு முன்னர்ஜனு திபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் வெளிநாடுகளிற்கான முதலாவது விஜயத்தை இப்போதுதான் மேற்கொண்டார்.

வால்ட் ஹெய்மைச் சுற்றி கிளப்பப்பட்டுள்ள "நாஜி போர்க் - குற்ற " சர்ச்சை பற்றி தனது பரஸ்பர உரையாடலில் எது வுமே பாப்பரசர் குறிப்பிடவில்லை. ஆனல்,ஐக்கிய நாடுகள் - சபையில் பத்துவருட காலம் செயலாளர்நாயகமாக பதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசித்த வால்ட் ஹெய்மின் சேவையை பாப்பரசர் பாராட்டியு யுள்ளார்.

இருவருக்கும் இடையிலான இச்சந்திப்பு உலகம் முழுவதிலும் உள்ள யூத குழுக்கள் இஸ்ரேல் ஆகியவற்றின் மத்தியில் பெரும் அதிருப்தி யையும் ஆவேசத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

## நிக்கரகுவாவின் புரட்சியரசுக்கெதிரான சீனாவின் சதி அம்பலத்துக்கு வருகிறது.

நிக்குராகுவாவின் புரட்சிகர அரசுக்கெதிரான போராட்டத்தை நடாத்துகின்ற கொந்திராஸ் கிளர்ச்சியாளருக்கு 70 இலட்சம். டாலர்கள் பெறுமதியான ஆயுதங்களை சீன விற்றுள்ள விடயம்அம் பலத்திற்கு வந்துள்ளது.

அமெரிக்கா தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் முன்னாள் அதிகாரி யான ஒலிவர் நோர்த்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒப்பந்தத் தின்கீழ் பிரஸ்திப ஆயுத விற்பனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக "பார் ஈஸ்டன் எக்கனமிக் றிவியூ" கருத்து வெளியிட்டுள்ளது.

வாசிங்டனில் இருக்கும் சீன ஸ்தாதரகப் பாதுகாப்பு அதிகாரி ஜெனரல் சாங் லூடாங்கிற்கும் ஒலிவார் நோத்துக்கும்இடையே 1984 நவம்பரில் நடைபெற்ற இரகசிய சந்திப்பின்போது தேஆயு தவிற்பனைக்கான ஏற்பாடு செய்யப்பட்டதாக அறிய வந்துள்ளது.

நிக்கரகுவா மக்கள் ஜனாதிபதி டானியல் ஒட்டாகேவின் தலைமை யிலான புரட்சிகர அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங் கிவருவதன் மூலம் எதிர்ப்புரட்சியாளர்களின் நடவடிக்கைகள் முறி யடிக்கப்பட்டு, வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்களும் ஆயுதபாணிகளாவோம்!



இந்தக் காக்கி உடைகளைப்
பாருங்கள், இன வெறியைத்
தார்மீகமாகக் கொண்ட சிறிலங்கா
அரசின் கூலிப்படைகள்.
இவர்களின் துப்பாக்கிகள் தாம்
ஈழமக்களின் இரத்தத்தைக்
குடித்துக் கொண்டிருக்கின்றன.
இவர்கள்தாம் ஈழப்பிரதேசத்தைப்
பிணக் காடாக்கியவர்கள்.
இவர்கள்தாம் எமது இலக்கு
இவர்களை விரட்டியடித்து
ஈழத்தை மீட்பதுதான்
எமது இலட்சியம்
இவர்களை வெல்ல, எங்கள்
துயரங்களிற்கு முற்றுப்புள்ளி
வைக்க எமது மக்கள் அனை
வரும் ஆயுதபாணிகளாக்கப்
படவேண்டும் என்ற நிலை இன்று
வந்துவிட்டது. நாங்கள் –
எம்மைத் தயார்ப்படுத்துவோம்.

வெளியீடு: ஈழமக்கள் செய்தித் தொடர்புநிலையம் – பிரான்சுப் பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org